விண்ணியலும் வாழ்வியலும்

# திருக்குறளும் விண்ணியலும்




கோ. இரவிச்சந்திரன்

# திருக்குறளும் விண்ணியலும்

**நிலா பயிற்சி மையம்**

ஆழியார்

பொள்ளாச்சி

நூலின் பெயர் : திருக்குறளும் விண்ணியலும்

முதல் பதிப்பு : 14-02-2026

பக்கங்கள் : 96

கோ. இரவிச்சந்திரன்

**நிலா பயிற்சி மையம்**

சிவகன்யா தொப்பு, ஆழியார்

பொள்ளாச்சி

Ph. 98422 16465

email : vinniyalumvazhviyalum@gmail.com

URL: www.sidhariyal.com

# பொருளடக்கம்


1. முகவுரை 5

2. திருக்குறளும் விண்ணியலும் 9

முப்பால் 13

அறத்துப்பால் 14

பொருட்பால் 16

இன்பத்துப்பால் 18

**விண்ணியலும் வாழ்வியலும்.**

நான் விண்ணியலும் வாழ்வியலும் எனும் தலைப்பில் கடந்த 5 ஆண்டுகளாக Telegram chl, youtube மற்றும் Whatsapp -ல் எழுதி வருகிறேன். நான்  எழுதுவதற்கு தரவுகள் நேரடியாக வான் பார்த்து அதவாது கருவரையிலிருந்து கொடிமரம் வழியாக வான் பார்த்து, மற்றும் கொடிமரத்தின் நிழல் குறித்து,  அறிந்த தகவல்களின் அடிப்படையிலும், மற்றும் பஞ்சாங்க கணக்குகளுக்கும், இந்த நிழலுக்கும், வானில் நட்சத்திர , மற்றும் ராசிகளில் , கோள்களின் நகர்வுகளையும், தொடர்ந்து கொடிமரத்தின் வழியாக கடந்த 10 வருசங்களாக அவதானித்து அறிந்து கொண்டது தான்.


இப்படி தொடர்ந்து பார்த்த பொழுது , தமிழ் எழுத்துக்கள் 247, மற்றும் திருக்குறள் எண்கள் 133 அதிகாரங்கள், 1330 குறள்களுக்கும் விண்ணியலுக்கும் உள்ள தொடர்பு புரிந்தது. மற்றும் தமிழ் எழுத்துக்களின் வடிவங்களுக்கு விண்ணியல் அர்த்தங்களும், மெய் இயல் அர்த்தங்களும் பிடிபட ஆரம்பித்தது. நம் தமிழர் வரலாறும், வாழ்வியலும் எவ்வளவு சிறந்தது என புரிந்ததை எழுதி இருக்கிறேன். Giza Pyramid -க்கும் திருக்குறளுக்கும் உள்ள தொடர்பு நேரில் சென்று எகிப்தில் பார்த்த பொழுது புரிந்தது. மற்றும் தமிழ்த் காலண்டர்கள் திருத்தப்படாமல் இருந்ததைப் பார்த்து தவறு இருக்கிறது என சொல்வதை விட அதை எப்படி சரி செய்வது என திருத்தப்பட்ட சித்தரியல் நாட்டியும் தயாரித்து இந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக தயாரித்துக் கொண்டு தவறுகள் இருப்பின் சரி செய்து திருத்திக் கொண்டு குழுவாக செயல்படுகிறோம்.


மற்றும் இதை குழந்தைகளுக்கு எப்படி கடத்துவது என்று , நிலா பயிற்சி மையம் எனும் NIOS home Schooling. ல்  15 குழந்தைகளுடன் தினமும் வான் பார்த்து அவர்களுக்கும் , தமிழின் வழியாக புரிய வைக்க முடியும் என்ற நம்பிக்கையிலும் இதை எழுதி இருக்கிறேன். மற்றும் பஞ்சாங்க கட்டங்களை **www.Sidhariyal.com** எனும் வளைதளத்தில், நாட்காட்டி , சோதிடம் என முயற்சித்து , நம் பிறந்த நாளை இடுகை இட்டால் சோதிட கட்டமும் வருமாறு

வடிவமைத்து அதை சரிபார்க்க, சோதிடர்களுக்கு இலவசமாக கொடுத்து உள்ளோம். மற்றும் கர்ப்போட்டம் பார்ப்பது எப்படி அதன் Logic என்ன, நம் தோட்டத்தில் அடுத்த வருடம் என்ன மழை பெய்யும், எப்பொழுது பெய்யும் என குறிப்புகள் எடுப்பது எப்படி? என்றும் குழுவாக அவதானித்து 80% வெற்றியும் அடைந்துள்ளோம். இயற்கை வாழ்வியலை ஐயா நம்மாழ்வார் அவர்களோடு நான்கு ஆண்டுகள் பயணித்துக் கற்றுக்கொண்டேன். 60 சுழல் ஆண்டுகள், மற்றும் தமிழர் வரலாறு பற்றி பாண்டியன் ஐயா! அவர்களிடம் அறிந்து கொண்டேன். தற்சார்பு வாழ்வியல், மருந்தில்லா மருத்துவத்தை ஐயா healer பாஸ்கர் அவர்களோடு கடந்த 10 வருசங்களாக பயணித்து அறிந்து கொண்டேன்.

இந்த புத்தகத்தில் தவறுகள் இருக்கலாம் , அதை சரியானபடி சுட்டிக் காட்டினால் திருத்தவும் தயராக உள்ளேன். நான் இந்த புத்தகத்தில் எழுதியுள்ள கருத்துக்கள் ஆங்காங்கே படித்தும், கடைபிடித்தும் பார்த்த அனுபவங்களையும் பகிர்ந்து உள்ளேன். முதல் 500 புத்தகங்களை அடித்து அணிந்துறைக்காக இதை தயாரித்து இருக்கிறேன். அனைவரும் ஏற்றுக் கொண்டால் இதை ஒரு பாடப்புத்தகமாக பெரியவர்கள் முதலில் படித்துப் புரிந்து கொண்டு விண்ணியலோடு தொடர்பு கொண்ட தமிழை, குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்க தயாராக வேண்டும்.

கோ. இரவிச்சந்திரன்.
98422 16465
vinniyalumvazhviyalum@gmail.com.
விண்ணியலும் வாழ்வியலும்.
நித்தமும் நிந்தன் நினைவுடன்.






# திருக்குறளில் விண் இயல்

# திருக்குறளும் விண்ணியலும்

**அமைதி, ஆனந்தம், நிம்மதி.**

இது உணர்வுகள், இது நலம்.

**கோபம், கவலை, துக்கம், பயம், பெருமை**

இவை உணர்ச்சிகள். 90% நோய்க்கு காரணம் இந்த உணர்ச்சிகள் தான்.

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு.**



கல்வி அதிகாரத்தில் 392-ம் குறளின் பொருள் எண்ணை முதலாகவும், ஏனைய எழுத்து என இரண்டாம் இடத்திலும் திருவள்ளுவர் கூறி இருக்கிறார். இதற்குப் பொருள், திருக்குறளில் உள்ள எழுத்துக்களின் கருத்துக்களை விட எண்கள் தான் கண்போல மிக முக்கியம் இந்த பூவுலகில் வாழும் உயிர்களுக்கு என கூறியிருக்கிறார்.

திருக்குறளில் முப்பால் இருக்கிறது.

1. அறத்துப் பால்
2. பொருட்பால்
3. இன்பத்துப் பால்

அது என்ன பால்? அது என்ன மூன்று பால்கள்.

அறம், பொருள், இன்பம்.

வீடு எனும் நான்காவதாக ஏதேனும் உள்ளதா?

13 இயல்கள்

133 அதிகாரங்கள்.

1330 குறள்கள்.

ஒரு குறளில் இரண்டு அடி.
முதல் அடியில் நான்கு சீர்.
இரண்டாம் அடியில் மூன்று சீர்.
மொத்தம் 7 சீர்.

ஒரு அதிகாரத்திற்கு 10 குறள்.
12 இயல்களில் 120 குறள்கள்.
13 வது இயலில் 13 குறள்கள்.

தசாபுத்திக்கும் திருக்குறளுக்கும் உள்ள தொடர்பு?

அதிகாரங்கள் என்றால் என்ன?

திருக்குறளை யாராவது எரித்து விட்டார்களா?

அதிகாரங்களைத் திருடிக் கொண்டார்களா?

வீடு என்றால் என்ன ?

வீடு பேறு அடைதல் என்றால் என்ன?

திருவள்ளுவர் யார்?

ஊழிக்கும் திருக்குறளுக்கும் சம்பந்தம் உண்டா?

சூரிய சுற்றின் கணக்குகள் திருக்குறளில் உள்ளதா?

திருக்குறளுக்கும் Giza pyramid - க்கும் உள்ள தொடர்பு என்ன?

என அனைத்துக்கும் விடை தேடுவது தான் இந்த நூலின் நோக்கம்.

## முப்பால்

- அறத்துப்பால்
- பொருட்பால்
- இன்பத்துப்பால்

**முப்பால் :**


பால் என்பதன் உண்மையான பொருள், என்னவென்றால், நம் முன்னோர்கள் இந்த வானத்தை பால் கடலாகத்தான் பார்த்தார்கள். வானில் நகரும் வெளிச்சப்புள்ளிகளை விண்மீன்களாகத் தான் பார்த்தார்கள். அந்த பால் வெளி கணக்குகளைத் தான் இந்த திருக்குறளின் எண்களில் கூறுகிறேன், என திருவள்ளுவர் அந்த குறளில் கூறியுள்ளார். ஆங்கிலத்தில் பால்வெளியை milky - Way என்று அழைப்பார்கள்.

நம் Galaxy -ன் பெயர் பால் வெளி மண்டலம். அண்டம் என்பதும் Galaxy - என்பதும், பால்வெளி என்பதும் ஒன்றே. நம் பால்வெளி நான்கு கரங்களைக் கொண்டது. ஒவ்வொரு கரத்திலும் பல புவனங்கள் இருக்கும். புவனத்திற்கு ஆங்கிலத்தில் Cluster என்று பெயர்.



ஒவ்வொரு Cluster - க்குள்ளும் கோடிக்கணக்கான சூரியன்கள் இருக்கும். நம் கண்களுக்குத் தெரியும் தனித்தனியான விண்மீன்கள் நம் புவனத்தில் உள்ள சூரியன்கள் தான். நம் கிருத்திகை நட்சத்திரம் கோடிக்கனக்கான சூரியன்களைக் கொண்ட நமக்கு அருகில் இருக்கும் Cluster - தான்.


இந்த அண்டத்தில் நான்கு கரத்தில் ஒரு கரத்தில் நம் புவனத்திற்குள் (Cluster) - நம் சூரியன் இருக்கிறது. இந்தப் பால் வெளியின் நம் அண்டத்தின் கணக்குகள் தான் திருக்குறளில் இருக்கிறது. அறம், பொருள், இன்பம் எனும் மூன்று பால் எதற்கு.




**அறத்துப்பால்:**

அறம் என்றாலே முருகன் தான். நமக்கு அறம், மறம் என்பதற்கு பொருள் உணர்த்தி எப்படி வாழ வேண்டும் என்று முதல் ஊழிக்குப் பிறகு உணர்த்தி நம்மோடு வாழ்ந்து காட்டியவர்.

ஊழியை விண்ணியல் கணக்குகளால் முன்பே அறிந்து, புரிந்து தம்மோடு, குமரிக்கண்டத்திலிருந்து, கால்நடைகளை ஓட்டிக் கொண்டு கால்நடையாக காவடியுடன்



நடந்து ஊழியை வென்றெடுத்தவர் முருகன். அவர் நினைவாக அவர் காலத்தை முன்னிறுத்தத்தான் அறத்துப் பால்.

யாமிருக்க பயம் ஏன்? என்று நம்மை வழிநடத்தியவர். அறத்துப் பாலில் 38 அதிகாரம்.

இல்லறவியல் எனும் 20 அதிகாரத்தில் இல்லறம் நமக்கு சொல்லிக் கொடுத்தவர். இவருடைய காலம் 12,600 ஆண்டுகளுக்கு முன்பு. துறவிலும் அறம் இருப்பதை உணர்த்தியவர். மருத நிலங்களை உருவாக்கி மக்களை நெய்தல் வழியாக புலம் பெயர உதவி செய்து, ஐயன் என பெயர் பெற்ற, துவாபர யுகத்துக்குச் சொந்தக்காரர்.

இரண்டாம் தமிழ்ச்சங்கத்தை இலங்கையின் கபாடபுரத்தில் நிறுவிய முருகனை சிறப்பித்துத் தான் பாயிரத்தில் இரண்டாவது குறளில்

**கற்றதனால் ஆன பயனென் கொள் வாலறிவன்**
**நற்றாள் தொழார் எனின்.**

என பாடியுள்ளார்.

இதில் வால் அறிவன் என்பது முருகனின் கையில் உள்ள வேல் குறித்துத்தான் பாடியுள்ளார். அந்த வேல் என்பது மனித உயிர்களின் விந்து அனுவின் வடிவம் தான். இயற்கையின் படைப்பில் மகத்தான படைப்பு மனிதன். அவனின் உயிர் அணுவைப் பற்றி தெரிந்து கொள்வது தான் கற்றதனால் ஆன பயன் என்கிறார், திருவள்ளுவர்.

பிரமாண்டமான இயற்கை தான் இறைவன். அந்த அறம் சார்ந்த இறைவனின் நற் தாளைத் தொழாதவர்களுக்கு அந்த வால் ஆகிய உயிர் அணுவைப் பற்றி முழுவதும் தெரிந்து கொள்ள முடியாது என்கிறார், திருவள்ளுவர்.

அந்த வால் ஆகிய வேலின் வடிவத்தில் முருகன் அறிந்ததனால் தான் அதை வேலாக கையில் வைத்து இருக்கிறார்.

**பொருட் பால்:**

கண்களால் பார்க்கும் அனைத்தும் பொருள் எனப்படும். பொருள் என்றாலே சிவம் தான். கண்ணுக்குத் தெரியும் இந்த இடைவெளியும் பொருள்தான். இந்த பொருட்களை இயக்குவது சக்தி. சக்தி கண்களுக்குத் தெரியாது. அண்டத்திலிருந்து வெடித்து கிளம்பியவை அனைத்தும் சிவம்தான். அந்த அண்ட மலர்வு நடந்த இடம் இன்னும் சிவந்து வெறும் கண்களால் பார்க்க முடிகிறது. அந்த அண்ட மலர்வு நடந்த இடத்தை வானில் காட்டி, இதுதான் நம் அண்டத்தின் மையம் என நமக்கு இந்த பிரம்மாண்டமான இயற்கையை காட்டி நான்கு வேதங்களை கற்றுக் கொடுத்தவர் நம் ஆதி குரு, ஆலமர்ச்செல்வன், ஆல மரத்தடியான், ஆதி பகவன், கருப்புசாமியான நம் சிவன். அவர் காலத்தைக் குறிக்கும் விதமாக பொருட்பால்.

காலத்தால் மூத்தவர் சிவன். 20,000 ஆண்டுகளுக்கு முற்ப்பட்டவர் சிவன். குறிஞ்சி ஆட்சியை செவ்வனே செய்து நமக்கு காலத்தை அறிமுகப்படுத்தியவர். இவர் காலத்தில் தான் அரசியல், அமைச்சியல், நட்பு இயல், குடிமை இயல் என இணைந்து, வாழ்வது எப்படி என கற்றுக் கொடுத்தவர்.

பொருட்பாவில் 70 அதிகாரங்கள். கிரி என்றால் மலை



என பொருள். மலையும் மலை சார்ந்த இடம் குறிஞ்சி. குமரிக்கண்டத்தில், புலி தோல் போர்த்தி காளையில் மலைகளில் வலம் வந்தவர். கிரிதயுகத்துக்குச் சொந்தக்காரர். அன்மைச் சுட்டு, சேய்மை சுட்டு போல காலத்தால் மூத்தவர், அதனால் சேயோன் என பெயர் பெற்றவர்.காலத்தை நிலவின் ஓட்டத்தில் வகுத்து மூன்றாம் பிறையை மாதத்தின் முதல் நாளாக்கி, நிலா காலந்தெறி உருவாக்கி காலன் என பெயர் பெற்றவர். நான்கு வேதங்களான,

1. (heat management) உருக்கிப் பிரித்தல் வேதம்,
2.(Sound management, musical) அதிர்வன வேதம்,
3. (தெற்கு) ய சூரண வேதம். (மருத்துவ சூரணங்கள் தயாரித்தல்),
4.(அரசியல்), சாம வேதம்.

என நமக்கு வேதியியல்களை கற்றுக் கொடுத்தவர். அவருடைய காலத்தைப் பற்றிய காலக் கணக்குகள் பொருட்பாவில் திருவள்ளுவர் கொடுத்துள்ளார்.

சிவன், குமரிக் கண்டத்தில் முதல் தமிழ்ச் சங்கத்தை உருவாக்கி வழிநடத்தியவர். திருவள்ளுவர் தன் முதல் குறளில் ஆதி சிவனைச் சிறப்பித்துத் தான்

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு .**

என பாடியுள்ளார்.

நாம் தற்பொழுது பயன்படுத்தும் தமிழ் எழுத்துக்கள் 247-ம் ஆதி பகவனுக்கு முன்பே இருந்ததாக திருவள்ளுவர் கூறுகிறார். அதைப் பற்றி விரிவாக தமிழ் எழுத்துக்களின் மதத்துவங்கள் எனும் புத்தகம் எழுதியிருக்கிறேன்.

**இன்பத்துப்பால் :**

பாலைத்திணை ஆட்சியான கலியுகத்தை நாம் இன்பமாக எப்படி கடக்க வேண்டும் என நமக்கு சொல்லிக் கொடுத்தவர் கருத்தினனான, கருப்பண்ணான, கிருட்டினன். 5126 சூரியமான ஆண்டுகளுக்கு (வருசங்களுக்கு) முன்பு தமிழ்நாட்டில் திருநெல்வேலி ஆதிச்ச நல்லூரில் நடைபெற்ற மகாபாரத போரை வழிநடத்தி வெற்றி கண்டு, இனி வரும் 5000 ஆண்டுகள் கலியுகத்தின் காலம், என கலியுக காலத்தைக் கணக்கிட்டு, அதை பூமியின் ஓட்டம், நிலவின் ஓட்டம், சூரியனின் ஓட்டம் என மூன்றையும் துல்லியமாக ஒரே இடத்தில் அமர்ந்து ஆராய, எகிப்தில் உள்ள நிலவு சென்று திரும்பும் Giza Pyramid உள்ள இடத்தை தேர்வு செய்து, அங்கு தொடர்ந்து 2666 ஆண்டுகள் அமர்ந்து, ஆராய்ச்சி செய்து அவருடைய கணக்குகள் சரியாக இருக்கிறதா? என பார்க்க ஏற்பாடு செய்து விட்டுச் சென்றவர்.

கால்நடைகளை புல்லாங்குழல் இசைத்து மயக்கும், மாடு மேய்க்கும், மாயோன். முல்லை நிலத்துக்குச் சொந்தக்காரர். கலியுகத்தில் நம் அரசர்கள் அந்தப்புரத்தின்



அடிமையாகி, Kitchen Cabinet தான் நடக்கும் என்று கிருட்டினன் சொன்னதை சூசகமாக நமக்கு இன்பத்துப் பாலில், காமத்துப் பாலாக கற்பியல், கள்வியல் எனும் 18+7=25 அதிகாரங்களில் திருவள்ளவர் சொல்லி இருக்கிறார்.

அந்த கலியுகக் கணக்குகள் தான் இன்பத்துப் பாலின் அதிகார கணக்குகள். கற்பியல் 18 அதிகாரங்கள் களவியல் என்ற 7 அதிகாரங்கள். மொத்தம் 25 அதிகாரங்களைக் கொண்டது இன்பத்துப்பால் எனும் கலியுகக் கணக்கு.

இரண்டாம் ஊழியில் கபாடபுரம், பூம்புகார் போன்ற பெருநகரங்கள் மூழ்கி இலங்கைக்கும், தமிழ் நாட்டுக்கும் இடையே நிலங்கள் மூழ்கியதால் அங்கு வாழ்ந்த பாண்டியர்கள் தாமிர பரணி ஆற்றங்கரையில் தங்கி வேளாண்மையை ஆரம்பித்தார்கள். அதை இங்கு வாழ்ந்த பழங்குடிகளான, கோனார்கள், சானார்கள், எதிர்த்தனர். 400 வருடங்களாக புகைந்த இந்த சண்டை கருத்தினன் காலத்தில் வெடித்து மகாபாரத போராக மாறியது. அதை வென்றெடுத்த கண்ணன், மதுரையில் மூன்றாம் தமிழ்ச் சங்கத்தை உருவாக்கிய அந்த கருத்தினனை சிறப்பித்து

**மலர்மிசை ஏகினான், மானடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடு வாழ்வார்.**

இந்த மூன்றாவது குறளில் பாடி உள்ளார்.

நம் கிருட்டிணன் மனிதர்களை மட்டுமல்ல அனைத்து உயிரினங்களையும் புல்லாங்குழல் இசையால் மயக்கியவர்.

இந்த அண்டம் உருவாக அண்ட வெடிப்பாக அண்ட மலர்வு நடந்ததைத்தான் நாதம் எனும் இசையாக (sound) , அந்த உயிர்கள் உருவாக காரணமான மலரும் இசையை ஏகியவனான இறைவனின் அடியைச் சேர்ந்தவர்கள், இந்த நிலம் ஆகிய புவி உள்ளவரை இசை பட நீடு வாழ்வார்கள் என கிருட்டினனின் புல்லாங்குழலில் மயங்கித்தான் திருவள்ளவர்

மூன்றாவது குறளாக பாடியுள்ளார்.

அறம், பொருள், இன்பம், வீடு என நான்கு பால்கள் உள்ளது. வீடு பேறு அடைதல் எனும் பால் ஆரம்ப காலத்தில் இருந்தது எனவும், இப்பொழுது அதாவது 19 ம் நூற்றாண்டில் திருக்குறளை ஓலைச் சுவடிகளில் இருந்து அச்சில் ஏற்றும் பொழுது ஆங்கிலேயர்களால் (எரிக்கப்பட்டு) திருத்தப்பட்டு 1330 மட்டும்தான் தற்போது அச்சிடப்பட்டுள்ளது என பிதற்றுபவர்கள் நிறைய இருக்கிறார்கள்.

ஆனால் விண்ணியல் கணக்குகளை வானில் அவதானித்தால் திருக்குறளின் 133 அதிகாரங்கள் சரியாகத்தான் இருக்கிறது. என புரிந்து கொள்ள முடியும். எப்படி?

திருமாலால் உருவாக்கப்பட்ட பஞ்சாங்கத்தில் மிக முக்கியமான கணக்கு தசாபுத்தி கணக்குகள்.

தசா என்றால் பத்து என பொருள். தசாபுத்தி என சொல்லி 9 கோள்களுக்கு ஆண்டுகள் கொடுக்கப்பட்டு இருக்கும். 9 கோள்களுக்கும் மொத்த ஆண்டுகள் 120 ஆண்டுகள்.

| | | |
|---|---|---|
| 1. சூரியன் | - | 6 |
| 2. திங்கள் | - | 10 |
| 3. செவ்வாய் | - | 7 |
| 4. ராகு | - | 18 |
| 5. வியாழன் | - | 16 |
| 6. சனி | - | 19 |
| 7. புதன் | - | 17 |
| 8. கேது | - | 7 |
| 9. வெள்ளி | - | 20 |

இந்த ஒன்பது கோள்களின் தசாபுத்தி ஆண்டுகளைக் கூட்டினால் 120 ஆண்டுகள்.

தசம் என்றால் 10 ஆனால் 9 கோள்கள் இருக்கிறது.

அந்த ஒரு புத்தி ஏன் இல்லை ?

நட்சத்திரங்கள் 27. இந்த நட்சத்திர மண்டலம் நாம் பார்க்கும் வானில் 360 சாய்ந்த வட்டப்பாதையில் இருக்கிறது. 360 திகிரி வட்டப்பாதையை 27 நட்சத்திரங்களால் வகுத்தால் கிடைப்பது 13.33 என்ற எண்.

இந்த 13.33 ஐ 9 ஆல் பெருக்கினால் கிடைக்கும் எண் 120,

10 ஆல் பெருக்கினால் 133.33.



இதில் 0.33 என்பதை நம் திருவள்ளுவர் கணக்கில் கொள்ளாமல் 133 என்று எடுத்துக் கொண்டார். ஏன் என்றால் ஒரு அதிகாரத்திற்கு 10 குறள். 0.33 என்றால், 10 குறள் வைக்க முடியாது. அதை விடுத்து 133 என்று வைத்துக் கொண்டார்.

இதுதான் விடுபட்ட குறள்.

பஞ்சாங்கத்தில் சூரியன் என குறிப்பிட்டு கொடுக்கப்பட்ட அனைத்து கணக்குகளும் பூமிக்கு உண்டான கணக்குகள். பஞ்சாங்க ராசி கட்டத்தில் சூரியன் ஒரு கட்டத்தைத் தாண்ட ஒரு மாதம் எடுத்துக் கொள்கிறது. பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது. அதுதான் ஒரு ராசியைக் கடக்க ஒரு மாதம் எடுத்துக் கொள்கிறது. ஆக சூரியனின் தசாபுத்தி - 6

என்பது பூமியின் கணக்கு.

எனில் உண்மையான ஞாயிறுவின் கணக்கு என்ன வாயிற்று? அதுதான் தசாபத்தி என்பது தசாபுத்தியில் இருக்கும் ஒன்பது கோள்களுடன் 10 வதாக சூரியன் கணக்கும் வர வேண்டும். அதுதான் அந்த 120 + 13.33 என்பது எனவே சூரியனின் தசாபத்தி 13.33 - ஐயும் 120 உடன் சேர்ந்தால் 133.33 என வரும்.

10 X 13.33 = 133.33

ஏன் தசா என்று சொல்லிவிட்டு சூரியன் கணக்கான 13.33 ஐ விட்டுவிட்டு பூமியை சூரியனாக கணக்கில் கொண்டனர் ?

பூமி நகர்வை நாம் வானில் சூரியன் ராசிகளில் நகர்வதை வைத்துத்தான் கணக்கிட்டோம். எனவே அதை சூரியனாகவே வைத்துக் கொண்டார்கள். ஆனால் சூரியனுடைய வட்டப்பாதை ராசிகளில் இல்லை. சூரியனின் அச்சு அலைவு (precision) 10 திகிரியுடன் சேர்த்து, சூரியனின் சாய்ந்த வட்டப்பாதை 33.33 திகிரியாக இருக்கிறது. நிலவின் ஓட்டம் 30 திகிரி சாய்ந்த வட்டப்பாதையாக இருக்கிறது. இதை நாம் ஒரு குச்சி நட்டு அதன் வழியாக இரவில் வான்பார்த்தால் எளிதில் விளங்கிக் கொள்ள முடியும். அதே போல் சூரியனுடைய அச்சும் , பூமியினுடைய அச்சும் 24 திகிரி விலகி இருக்கிறது.

நம் பால் வெளியின் 66 திகிரி சாய்ந்த வட்டப்பாதையில் வடக்குப் பார்த்த சூரியனின் அச்சு, பால் வெளி மையத்தை நோக்கி ஈர்க்கப்படுகிறது. ஆனால் பூமியின் வடக்கு அச்சு 66 - திகிரியில் இல்லாமல், சூரியனின் அச்சான 66 திகிரியிலிருந்து 24 திகிரி விலகி 90 திகிரி பேரண்ட மையத்தை நோக்கி இருக்கிறது.

பூமியின் நகர்வை நாம் ஒரு வருடம், குச்சி நட்டு நிழல் குறித்தால் புரிந்து கொள்ள முடியும். நிலவின் உதயத்தை

தினமும் பார்த்தால், கொடி மரத்தில் இருந்து நிலா தினமும் விலகிச் செல்வதை பார்க்க முடியும். ஒரு மாதத்தில் நிலவின் ஓட்டத்தைப் புரிந்து கொள்ளலாம். குச்சி (கொடி மரம்) நட்டு கருவரையில் இருந்து ஒரு மாதம் தினமும் அந்த கொடி மரத்தின் வழியாக பார்த்தால் நிலா தினமும் ஒரு நட்சத்திரம் கடப்பதை பார்க்கலாம். 27 நாட்களில் ஒரு முழு வட்டத்தை சுற்றி வருவதும் புரியும். நிலா கொடி மரத்தில் இடது புறமாக 30 திகிரி நகர்வதையும், வலது புறமாக 30 திகிரி நகர்வதையும் பார்க்கலாம்.

ஆக பூமி 24 திகிரி சாய்ந்த வட்டப்பாதையிலும் நிலா 30 திகிரி சாய்ந்தவட்டப்பாதையிலும், சூரியன் 33.3 திகிரி சாய்ந்த வட்டப்பாதையிலும் நகர்கிறது.

நம் பூமியின் அச்சு மட்டும்தான் 24 திகிரி விலகி இருக்கிறதா என்றால் நம் சூரிய குடும்பத்தில் உள்ள அனைத்துக் கோள்களும் அதனதன் நிறைக்குத் தகுந்தவாறு ஒரு திகிரி இரண்டு திகிரி விலகலில் 24 திகிரியை ஒட்டித்தான் விலகி இருக்கிறது.

நாம் பூமியிலிருந்து தான் அனைத்தையும் பார்க்கிறோம், எனவே நம் பூமியின் ஓட்டத்தோடு இயைந்து தான் நாம் கணக்கு எடுக்க முடியும். அதனால் தான் நம் கோள்களுக்கு வக்கிரம் எனும் நிகழ்வுகளை தசாபத்தியில் கூட்டியும், கழித்தும் தசாபுத்தி கணக்குகள் எடுக்கப்பட்டுள்ளது.

சூரியனின் நகர்வை நாம் கவனிக்க வேண்டும் என்றால் 60 ஆண்டுகள் தொடர்ந்து அவதானித்தால் தான் புரிந்து கொள்ள முடியும்.

தமிழ் மரபின் கணக்கு தான் 60 சுழல் ஆண்டுக் கணக்கு. இந்த 60 சுழல் ஆண்டுக் கணக்கு நம் பஞ்சாங்கத்தில் தொடர்ந்து ஒவ்வொரு பஞ்சாங்கத்திலும், தமிழ் காலண்டர்களிலும் , குறிக்கப்பட்டு இருக்கும். ஆனால் அதை

எந்த இடத்திலும் பயன் படுத்தி இருக்க மாட்டார்கள். இது வேண்டுமென்றே நடந்த அரசியல். அது சூரிய சுற்றின் நகர்வை கணிக்க நம் முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்ட தனிச்சிறப்பான கணக்கு.

நம் பூமி தன்னைத்தானே ஒரு நாளில் 360 திகிரி சுழன்று கொண்டு ஒரு திகிரி முன்னோக்கி நகரும். அதாவது 24 மணி நேரத்தின் கடைசி நான்கு நிமிடத்தில் அது அடுத்த திகிரியில் இருக்கும். அதாவது ஒரு நாளைக்கு 1440 நிமிடம். 1436 நிமிடத்தில் பூமி அடுத்த திகிரிக்குள் இருக்கும். பூமியிலிருந்து நாம் வான் பார்த்தால் இப்படித்தான் கணக்கு எடுக்க முடியும். இப்படி 360 நாட்ககளில் பூமி 360 திகிரி நகர்ந்து இருக்க வேண்டும். ஆனால் பூமியின் எதிர்த்திசையில் சூரியன் சுழன்று கொண்டு பயனிப்பதால் 360 நாட்களில் ஒரு முழு வட்டத்தை முடிக்க முடியாமல் 366 நாட்கள் ஆகிறது. 360 நாட்களில் நாம் காலை 5.30 மணிக்கு வானத்தை அவதானித்தால் இன்னும் 24 நிமிடம் தாமதமாக இருப்பது புரியும்.

நம் ஒவ்வொரு கோயில்களிலும் அதிகாலை நேரம் 5.30 மணிக்கு பூசை செய்வது கருவரையிலிருந்து கொடி மரத்தின் வழியாக வானத்தை அவதானிக்கத்தான். அந்த கணக்கு தான் அந்தந்த ஊருக்கு பஞ்சாங்க கணக்காக இருக்கும். வானத்தை அவதானித்து கணக்கெடுப்பவர்கள் தான் பூசாரிகள். மணி ஆட்டி தட்டில் காசு கேட்பவர்கள் பூசாரிகள் அல்ல.

இப்படி ஒவ்வொரு வருசத்திலும் 360 நாட்களில் நாம் காலை 5.30 மணிக்கு வானில் நட்சத்திரங்களை கிழக்குத் தொடுவானில் அவதானித்தால் 2.22 ஆண்டுகளில் ஒரு நட்சத்திரம் பின் நோக்கி நகர்வதை வானில் நாம் பார்க்க முடியும். 60 ஆண்டுகளில் 27 நட்சத்திரங்களும் பின் நோக்கி நகர்ந்து ஒரு முழு சுற்று வந்திருக்கும். இதுதான் சூரியனின்

கரண கணக்கு. 60 சுழல் ஆண்டுகள் தான் நம் தமிழ் கணக்கு ஒவ்வொரு சுழல் ஆண்டு என்பது 360 நாட்களைக் கொண்டது. 365.25 (370.37 திதிகள்) என்பது பூமியில் இருந்து பார்க்கும் கணக்கு அல்ல. பூமியிலிருந்து கருவரையிலிருந்து கொடி மரத்தின் வழியே எடுக்கும் கணக்கில் ஒரு வருசத்திற்கு 366 நாட்கள் (370.37 திதிகள்). வருசம் வேறு சுழல் ஆண்டு வேறு. சுழல் ஆண்டு என்பது 360 நாட்கள். ஆண்டு என்பது 354 நாட்கள். அது நிலா நாட்காட்டியில் வரும் 12 பௌர்ணமி கணக்கு. ஒரு பௌர்ணமியில் இருந்து அடுத்த பௌர்ணமிக்கு 29.5 நாட்கள் (360 திதிகள்). 12 x 29.5 = 354 நாட்கள் ஒரு ஆண்டுக்கு. 29.5 நாட்கள் ஒரு மாசம்.

அதே போல் ஒரு வருடம் என்பது 324 நாட்களைக் கொண்டது. ஒரு திங்கள் என்பது 27 நாட்கள். நிலா 27 திதிகளில் 12 ராசியையும் கடந்து விடும். 12 x 27 = 324 திதிகள் ஒரு வருடத்திற்கு.

ஒரு மாதம் என்பது 29 நாட்கள், 30 நாட்கள், 31 நாட்கள், 32 நாட்கள் என ஒவ்வொரு மாதமும் மாறும். ஒரு வருசத்திற்கு 366 நாட்களில் மாத கணக்கு மாறும்.

| | |
|---|---|
| திங்கள் - 27 திதிகள் | வருடம் - 324 திதிகள். |
| மாசம் - 29.5 நாட்கள் (30 திதிகள்) | ஆண்டு- 354 நாட்கள். (360 திதிகள்) |
| மாதம் - 30 நாட்கள் | சுழல் ஆண்டு - 360 நாட்கள். |
| மாதம் - 29, 30, 31, 32 நாட்கள் | வருசம் - 366 நாட்கள். |

இப்படி வெவ்வேறு கணக்குகளை ஒன்றினைத்து நாம் நாட்காட்டிகள் வைத்து இருந்தோம். ஆனால் ஆங்கில கணக்கு 365.25 நாட்களாக்கி, நாள் ஆரம்பம் காலையில் இருந்ததை நடு இரவு 12 மணிக்கு மாற்றி நமக்கு +5.30 கொடுத்து இலங்கைக்கு கிழக்கில் இருந்த 0 திகிரியை - 90 திகிரி ஆக்கி, இங்கிலாந்தில் உள்ள ராயல் அப்சர் வேட்டரி, கிரீன்விச்சுக்கு 0 திகிரியை

1680-ல் மாற்றிக் கொண்டார்கள். நாம் கருவரையில் இருந்து கொடி மரத்தின் வழியாக வானில் அவதானித்த கணக்குகளை மறைத்து, கொடிமரங்களின் மேல் மண்டபங்களைக் கட்டி நிழல் குறிக்க முடியாமல், நம் பூசாரிகள் அப்புறப் படுத்தப்பட்டார்கள். பூசைகள், சாத்திரம், சம்பிரதாயம் மட்டும் இருக்கிறது. முக்கியமான வானத்தை அவதானிக்கும் பூசாரிகள் இல்லாமல் ஆக்கப்பட்டார்கள். எனவே நம் கணக்குகளை இந்த 420 ஆண்டுகளில் நாமே மறந்து விட்டோம்.

ஆனாலும் பழைய பஞ்சாங்கம் அப்படியே இருக்கிறது. அதிலிருந்து கணக்குகள் மீண்டு வரும். சூரிய சுற்றும் திருக்குறளின் கணக்குகளில் மீண்டு வரும். வரக்கூடிய பெரும் ஊழியும் அதை நிரூபிக்கும்.

திருக்குறளில் இருப்பது ஆண்டு கணக்குகள் தான். ஒரு ஆண்டுக்கு 360 திதிகள்.

வீடு பேறு அடைதல் என்ற பால் கணக்கு திருக்குறளில் உள்ளதா? இல்லம் = வீடு.

இல் அறம் = இல்லறம் இல்லாமல் வீடு பேறு அடைதல் முடியாது. இல்லறவியலில் 20 அதிகாரங்கள் ஏன் கொடுத்தார் திருவள்ளுவர்.

திருக்குறளில் மொத்தம் 1330 குறள்கள். ஒவ்வொரு குறளும் ஒரு ஆண்டு. (இல்லறவியல்) 20 x 1330 = 26, 660 ஆண்டுகள் ஆகும். சூரியன் ஒரு சுற்று வர. இந்த 1330 ஆண்டுகள் கணக்கு எப்படி பொருந்துகிறது விண்ணியல் கணக்குகளில்?

இந்த அண்டத்தில் சூரியன் சுற்றிக் கொண்டு உள்ளதா? எனில் அதன் சுற்று கணக்கை நம் முன்னோர்கள் எப்படி கணித்தார்கள்?. இது புரிந்தாலே திருக்குறள் எண்கள் வெகு எளிதாக புரிந்து விடும். கோயில் இல்லாத ஊர்களில் குடி

இருக்கக் கூடாது என்பது நம் தமிழ் மரபின் வளமை. எனவே கோயில்கள் என்பது நமது 64 (கலைகளை) தொழில்களை கற்றுத்தரும் பள்ளிகளாகத் தான் 420 ஆண்டுகளுக்கு முன்பு வரை இருந்தது.

ஒரு கோயில் கட்டுவதற்கு முன்பு ஒரு கொடி மரம் ஒன்று நட்டு அதன் நிழல்களை குறித்து சமநாளை கண்டுபிடித்து, மற்றும் கதிர் திருப்ப நாள் இரண்டையும் நிழல் குறித்து அந்த நிழலின் அடிப்படையில் சரியான கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு கண்டுபிடித்து கோயில் கட்ட வேண்டும். இந்த நிழல் குறிப்பிலிருந்து தான் பூமியில் நம் இருப்பிடமான தீர்க்க ரேகை, அட்ச ரேகை (Latitude, Longitude) கண்டுபிடித்து நம்முடைய காலண்டர்கள், பஞ்சாங்கம் நம் இருப்பிடத்திற்கு தக்கவாறு அந்தந்த ஊர்களில் தயாரித்துக் கொள்வார்கள்.

கொடி மரத்தின் சமநாள் நிழலைக் கொண்டு தான் கருவரை அமைப்பார்கள். அந்தக் கருவரையிலிருந்து கொடி மரத்தின் வழியாக வானத்தை அவதானித்தால், ராசி, நட்சத்திர மண்டலங்களை அடையாளம் கண்டு கொள்ள முடியும். ராசிகளும், நல்சித்திரங்களும், சாய்ந்த வட்டப்பாதையில் இருப்பதை பார்க்கலாம். அதில் நிலா, சூரியன், மற்றும் நம் சூரிய குடும்பத்தில் உள்ள , செவ்வாய், புதன், வியாழன், சனி, என 7 கோள்களையும் வெறும் கண்களால் நகர்வதை அவதானிக்கலாம்.

இப்படி வெறும் கண்களால், 27 நட்சத்திரங்களையும், 12 ராசிகளையும் வானத்தில் தரிசிக்க முடியும். அதன் நகர்வை நீங்களே கணக்கீடு செய்ய முடியும். அப்படி பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அவதானித்ததுதான் பஞ்சாங்கக் கணக்குகள். அதில் 60 சுழல் ஆண்டுக் கணக்கையும், சூரியனின் சுற்றைச் சொல்லும் கரணம், யோகம் கணக்குகளையும் நம்க்கு இந்த 420 வருசங்களாக

மறைத்து விட்டார்கள். நம் பூசாரிகள் நம் கோயில்களில் இல்லை.

நாம் ஒரு குச்சி நட்டு நிழல் குறித்து சமநாளை குறித்து வைத்துக் கொண்டு கவனித்தால் அந்த சமநாள் ஒவ்வொரு 1330 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு நாள் பின் நோக்கி நகரும். இதைத்தான் ஆங்கில நாட்காட்டியில் காணலாம். முருகன் காலத்தில் அதாவது குமரிக் கண்டம் நீரில் மூழ்கிய போது ஏப்ரல் - 1 - ல் இருந்த சமநாள் இப்பொழுது march - 20 - ல் இருக்கிறது. ஆனால் ஆங்கில கிரிகோரியன் நாட்காட்டி ஆரம்பித்து 425 ஆண்டுகள் தான் ஆயிற்று ஆனால் இந்த கணக்கையும் அதில் அவர்கள் அறியாமல் உள்ளது. ஒரு வேளை நம் சித்தர்கள் யாராவது அப்படி அவர்களுக்கு நாட்காட்டியை சரி செய்து கொடுத்து இருப்பார்கள் போல் உள்ளது.

வீடு என்பது இல்லம். இல்லத்தில் அறம் சார்ந்த வாழ்வியல் சொல்வது போன்று,  வீடு பேறு அடைதலுக்கு மூலம் இல்லறம் என்பதை திருவள்ளுவர் 20 அதிகாரத்தில் கூறி விடுகிறார். எனவே நான்காம் பால் வீடு பேறு அடைதல் இந்த சுக்கிரனுடைய இல்லறவியலில் முடிந்து விடுகிறது. அதாவது பூமி சூரியனை சுற்ற ஒரு வருசம் (365.25 நாட்கள் அல்லது 370.37 திதிகள்) எடுத்துக் கொள்கிறது. 12 ராசிகளில் சுற்றி வருகிறது. பூமி ஒரு நாளைக்கு அதாவது  24 மணி நேரத்தில் ஒரு திகிரி நகர்ந்து விடுகிறது. ஒரு ராசிக்கு 30 திகிரி என்றால் 12 ராசிக்கு 360 திகிரி. 360 திகிரி என்பது சரியான வட்டம். நீள் வட்டம் அல்ல. ஆனால் பூமி சூரியனை சுற்றி வர 365.25 நாட்கள் எடுத்துக் கொள்கிறது. நீள் வட்டம் என்பதால் 365.25 நாட்கள் ஆகிறது. எனவே தான் சில ரராசிகளில் 29 நாட்களும், சில ராசிகளில் 30 நாட்களும், சில ராசிகளில் 31 நாட்களும், ஆடி மாதத்தில் 32 நாட்களும் ஆகின்றது. இது

பூமியும், சூரியனும் எதிர் திசையில் பயணிப்பதால் நடக்கும் நிகழ்வு.

இது போல சூரியனும், சக்திமையமும் எதிரெதிர் திசையில் சுழல்வதால் சூரியனின் சுற்றும் நீள் வட்டமாக அமையும். சரியான வட்டத்தில் சூரியன் சுற்றி வந்தால் 24,000 சுழல் ஆண்டுகளில் மேற்கு கிழக்காக ஒரு சுற்று சுற்றி விடும். ஆனால் இது சரியான வட்டமாக இல்லாமல் நீள் வட்டமாக இருப்பதால் 26,666.666 சுழல் ஆண்டுகள் ஆகிறது. ஒரு ஆண்டு என்பது 360 திதிகளைக் கொண்டது. 26, 666 666 x 360 = 96,00,000 திதிகள். சூரியன் ஒரு முழு சுற்று சுற்றி வர எடுக்கும் நாட்கள் 96 லட்சம் திதிகள். 60 ஆண்டுகளுக்கு 60 x 360 = 21,600 திதிகள் ஆகின்றது.

நிலா ஒரு நாளைக்கு 13.33 திகிரி வானில் நகர்கிறது. 30 நாட்களுக்கு 30 x 13.33 = 400. திதி என்பது நிலா 13 திகிரி நகர எடுக்கும் கால அளவு. உண்மையில் நிலா ஒரு திதியில் 12 திகிரி நகரும். பூமியுடன் சேர்ந்து நிலா நகர்வதை சேர்த்தால் 13 திகிரி நகர்வது போல தெரியும். பூமி ஒரு திதியில் ஒரு திகிரி நகர்ந்து இருக்கும். 30 திதியில் 390 திகிரி நிலா நகர்ந்து இருக்கும். நாட்கள் 29.5 நாட்கள் ஆகியிருக்கும். 30 திதியில் பௌர்ணமி to பௌர்ணமி வந்து விடும். திதி கணக்கு வேறு, நாள் கணக்கு வேறு. 390 திகிரியில் பௌர்ணமி to பௌர்ணமி வந்து விடும். ஆனால் 30 நாட்களில் 400 திகிரி நிலா நகர்ந்து இருக்கும். இந்த 10 திகிரி வித்தியாசம் என்பது சூரியன் எதிர்திசையில் நகர்வதால் ஏற்படும் நிகழ்வு.

இந்த நிகழ்வை வானில் கவனிக்கத் தான் கோயில் கருவறையும், கொடி மரமும் உருவாக்கப்பட்டது. கிழக்கில் உள்ள மதில் சுவரில் தினமும் நிலாவின் உதயத்தை கணித்தால் திதியின் கால அளவு தெரிந்து விடும். 30 வது உதயத்தில் மீண்டும் பௌர்ணமி வந்து விடும். இப்படி வானில் 7

கோள்களின் நகர்வை அவதானிக்கத் தான் கோயில்களில் 6 கால பூசை வழிபாடு பூசாரிகள் செய்தார்கள். காலத்தை முறையாக கணித்து ஒவ்வொரு 60 ஆண்டுகளுக்கும் சூரியன் ஒரு திகிரி வானில் நகர்வதை கணக்கிட்டு, சூரியனின் நகர்வு கணக்கை கரணம் யோகம் என பிரித்து அறிந்து கொண்டார்கள்.

ஒரு வீடு என்பது 1330 ஆண்டுகள். 20 வீடுகள் என்றால் 20 x 1330 = 26, 600 ஆண்டுகள். இந்த ஒரு வீடு என்பது சமநாள். ஒரு நாள் நகர ஆகும் காலம் ஆகும். முருகன் காலத்தில் April - 1 - ல் இருந்த சமநாள் 1330 ஆண்டுகளுக்கு ஒரு நாளாக குறைந்து இப்பொழுது march - 20-ல் சமநாள் வருகிறது. 12, 600 ஆண்டுகள் ஆகிவிட்டது. அதே போல் இந்த சமநாள் ஒரு திகிரி அதாவது சக்திமையம் 2 திகிரி நகர ஆகும் காலம் 1330 ஆண்டுகள். சக்திமையம் ஒரு திகிரி நகர 666.666 சந்திரமான ஆண்டுகள்.

அதே போல் சூரியன் ஒரு திகிரி நகர ஆகும் காலம்

(96,00,000 / 370.37 = 25,920 வருசங்கள்.)

25,920 / 360 = 72 வருசங்கள் அல்லது

(96,00,000 / 360 = 26, 666.666 ஆண்டுகள்)

26, 666, 666 / 360 = 74.074 ஆண்டுகள். சமநாள் ஒரு நாள் நகர்வது என்பது சக்திமையம் 2 திகிரி வடக்கு நோக்கி நகர ஆகும் காலம் 1330 (1333.33) ஆண்டுகள். சக்தி மையம் என்பது ஈர்ப்பு (magnetic field) விசை. அதாவது ஈர்ப்பு சக்தி சூரியனை அண்டத்தின் மையமான தென் புலத்தை கொண்ட சிவத்தை நோக்கி ஈர்க்கும் சக்தி. சூரியனின் வடபுலம் தென்புலத்தை நோக்கி ஈர்க்கப்படுகிறது. அந்த ஈர்ப்பு சக்தி வடக்கில் ஒரு திகிரி நகர ஆகும் காலம் 1333.33 ஆண்டுகள் ஆகிறது. அதை அறிவது தான் சமநாளின் நகர்வு.

சக்தி மையம் வடக்கில் ஒரு திகிரி நகருவதற்குள் சூரியன் மேற்கு கிழக்காக 18 திகிரி நகர்ந்து விடுகிறது. மேற்கு

கிழக்காக ஒரு சுற்று வருவதற்கு 20 வீடுகள். அதாவது 20 x 18 திகிரி = 360 திகிரி. என்றால் 1330 /18 = 74.074 ஆண்டுகள். சூரியன் சரியான வட்டத்தில் சுற்றினால் 74.074 ஆண்டுகளில் ஒரு திகிரி நகர்கிறது. ஆனால் சூரியனும், பூமியும் எதிரெதிராக சுற்றுவதால் அது நீள் வட்டமாக அமைந்து விடுகிறது. 60 ஆண்டுகளில் சூரியன் ஒரு திகிரி நகர்வதாக கரணம், யோக கணக்குகளில் நாம் அறிந்து கொள்வது காட்சிப் பிழை. பூமியிலிருந்து பார்க்கும் 30 திகிரி நகர்ந்தது போல தெரியும். 36 x 6 0 சூரியமான ஆண்டுகளில் 30 திகிரி நகர்ந்து போல தெரியும். ஆனால் சூரியன் சுற்று 33.33 திகிரி சாய்ந்த வட்டப்பாதை ஆதலால் 26.66 திகிரி தான் உண்மையில் நகர்ந்து இருக்கும். அதாவது இரண்டு நட்சத்திரம். இன்னும் ஒரு பாதம் நகர்ந்தால் தான் 30 திகிரி நகர்ந்ததாக ஆகும். . எனவே 26, 666.66 ஆண்டுகளை 60 ஆல் வகுத்தால் 444.44 நாட்களாக வரும். 74.074 ஆண்டுகளில் ஒரு திகிரி என்றால் 37.037 ஆண்டுகள் அரை திகிரி நகர ஆகும். காலம். இதையே வருச கணக்கில் பார்த்தால் சூரியன் ஒரு திகிரி நகர 96,00,000 / 370.37 திதிகள் = 25,920 வருசங்களை 360 திகிரியால் வகுத்தால் 72 வருசங்கள் ஆகும்.

நிலாவும் பூமியும் ஒரே திசையில் சுற்றுவதால் 27 நாட்களில் 360 திகிரியாகவும் . 30 நாட்களில் 40 திகிரி அதிகமாக நகர்ந்து மொத்தம் 400 திகிரியாக இருக்கிறது. இதே பூமியும், சூரியனும் எதிரெதிர் திசையில் சுற்றுவதால் இந்த 400 திகிரி விரிந்து 400 x 60 = 24,000 ஆண்டுகள் தான் ஆகும். என, நம் முன்னோர்கள் கணக்கீடு செய்து, சரி பார்க்கும் போது அது 26, 666.66 ஆண்டுகளாக இருப்பதை பார்த்து அது சக்திமைய சுற்றும், சூரியன் சுற்றும் எதிரெதிராக சுற்றிக் கொள்வதால் ஏற்படும் நிகழ்வு என அறிந்து கொண்டார்கள். இந்த நிகழ்வுகளை ஆராய தேர்ந்தெடுத்த இடம்தான் எகிப்திலுள்ள Giza Pyramid உள்ள இடம். அது நில நடுக் கோட்டிலிருந்து 30

திகிரி தள்ளி வடக்கில் உள்ளது. நிலா, நில நடுக் கோட்டிலிருந்து 30 திதிரி வரை சென்று திரும்புவதால் அந்த இடத்தை தேர்வு செய்தார்கள். அதுவும் கொல்லம் துறைமுகத்தில் இருந்து சென்று வர எளிதாக இருந்ததாலும் மற்றும் ஒரு ஆண்டில் “11" மாதம் வானம் தெளிவாக இருப்பதாலும், அந்த இடத்தை தேர்வு செய்தார்கள்.

எதற்காக இந்த சூரிய நகர்வை நம் முன்னோர்கள் கணிக்க வேண்டும் என நினைத்தார்கள் என்றால், நமது குமரிக்கண்டம் முதலாம் நீரூழியில் மூழ்கியது. மற்றும் இரண்டாம் நீரூழியில் பூம்புகாரை கடல் கொண்டது. எனில் அடுத்த ஊழி எப்பொழுது வரும் என்பது கணிக்கத்தான் அந்த இடத்தை தேர்வு செய்து ஒரே இடத்தில் சூரிய நகர்வை 1330 ஆண்டுகள் தங்கி இருந்து கணிக்க வேண்டும் என்பதாலும், அதை உறுதி செய்ய மீண்டும் 1330 ஆண்டுகள் சரி பார்க்க வேண்டும் என்பதாலும், அது பாலைவனம் என்பதால் குளிர்ச்சியாக இருக்க Pyramid வடிவில் அதை வடிவமைத்துக் கொண்டார்கள். 2660 வருடங்களாக அங்கு பணியாற்றிய அறிஞர்களை மரியாதை செய்து அங்கேயே சீவ சமாதி செய்து புதைத்தார்கள். அங்கே 2660 ஆண்டுகள் தங்கி எடுத்த தரவுகளைத் தான் திருவள்ளுவர் திருக்குறளாக வடித்து நமக்கு மறை நூலாக கொடுத்து இருக்கிறார்.

இரண்டாம் ஊழி நடந்து பூம்புகார் மூழ்கிய போது, இரண்டாம் தமிழ் சங்கம் இருந்த கபாடபுரமும் மூழ்கியதால் இரண்டாம் தமிழ்ச் சங்கத்தை, அப்பொழுது ஆளுமையாக இருந்த அகத்தியர் பொதிகை மலையில் ஆய்வு பகுதியாகவும், மதுரையில் ஆய்வுகளை மக்களிடம் எடுத்துக் கூறும் இடமாகவும் மாற்றினார். இலங்கையில் இருந்து இரண்டாம் ஊழிக்குப் பின் தாமிரபரணி வழியாக மேலே வந்த முருகன் குடிகளான பாண்டியர்களுக்கும், கோணார், நாடார்.

சாணார்களுக்கும் இடையே எழுந்த கடும் பகையால் இரண்டாம் தமிழ்ச்சங்கம் செயலற்று நின்று விட்டது. மற்றும் இரண்டாம் ஊழியில் பூம்புகார் மூழ்கிய போது மதுரைக்கு பிழைக்க வந்த கண்ணகியாலும் இரண்டாம் தமிழ்ச் சங்கம் தடைபட்டது. அதன் பின்பு 1480 வருசங்கள் கடந்து ஆளுமையாக இருந்த கிருட்டிணன் மகாபாரத போருக்குப் பின் மூன்றாம் தமிழ்ச் சங்கமாக மதுரையை மீண்டும் கட்டமைத்தார். இரண்டு ஊழி நடந்து விட்டதால் பின்னர் மூன்றாம் ஊழி எப்பொழுது நடக்கும் என்பதை அறிய மகபாரத போர் முடிந்த கையோடு போரில் தோற்றவர்கள் மீண்டும் கொல்லம் துறைமுகத்தில் நுழையாதவாறு பாதுகாக்க குருவாயூரில் ஆட்சி செய்து கொண்டே எகிப்தில் பிரமிடு கட்ட ஏற்பாடு செய்து அதை மேற்பார்வை இட்டு குருவாயூரில் சீவ சமாதி ஆனார். அவர் நம் அண்டத்தின் அத்தனை கணக்குகளையும் அறிந்து சொல்லி விட்டார். அதை சரிபார்க்கத்தான் பிரமிடு கட்ட ஏற்பாடு செய்தார். அதன் கணக்குகளை கொண்டு தான் அந்த பிரமிடுகள் கட்டப்பட்டது. கிருட்டிணனுக்கு நம் அண்டத்தின் கணக்குகளை finger point -ல் வைத்து இருந்ததைத்தான் அவருடைய ஆட்காட்டி விரலில் சங்கு சக்கரத்தை வைத்து உருவக படுத்தினார்கள். மகாபாரத போர் முடிந்த உடன் கிருட்டிணனுக்குப் புரிந்து விட்டது. இனி மக்கள் மனங்களும் மாறிவிட்டது. இனிமேல் கலிகாலம் தான். நல்ல ஆட்சி அமைப்பது கடினம் என தெரிந்து தான், மக்கள் இந்த கலிகாலத்தை எப்படி இன்பமாக கடக்க வேண்டும் என்பதற்காக கீதை உபதேசத்தை வழங்கி விட்டு நான் இறந்த நாளிலிருந்து 5000 ஆண்டுகள் கலிகாலமாக இருக்கும் என சொல்லி விட்டுச் சென்றார். அதாவது சூரியன் இரண்டு ஊழி முடிந்து 3 ராசிகளில் மீதி உள்ள தூரத்தை கடக்க இன்னும் 5000 சூரியமான ஆண்டுகள் ஆகும் என்பதை கணித்து சொல்லி

இருக்கிறார். அதை துள்ளியமாக கணிக்க பிரமிடு கட்ட கேரளத்தைச் சேர்ந்த ஈழவர்களான பரதவர்களையும், இலங்கையில் இருந்து முருகனிடம் பங்குனி உத்திரப் போரில் தோற்ற சாணர்களும், நாட்டார்களும் எகிப்துக்கு முதலாம் ஊழிக்குப் பின் புலம் பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருந்த மக்களை பயன் படுத்தி இருக்கிறார். நம் மலை மக்கள் மற்றும் சாணார்கள் எப்பொழுதும், முருகன் குடிகளை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எனவே அவர்கள் முருகன் உருவாக்கிய தமிழி எழுத்துக்களை பயன் படுத்த மாட்டார்கள். அவர்கள் சிவன் காலத்தில் பயன்படுத்திய சித்திர எழுத்துக்களையே பயன்படுத்தினார்கள். எனவே தான் Pramid களில் சித்திர எழுத்துக்கள் இருக்கும்.

நிலவின் ஓட்டத்தை வளர்பிறை, தேய்பிறை, அமாவாசை, பௌர்ணமி என திதிகளாக்கி வைத்திருக்கிறார்கள் நம் முன்னோர்கள். திதிகளை சாவுக்கு மட்டும் பயன்படுத்துகிறார்கள் இந்த சாவுகிராக்கிகள். ஆனால் இந்த திதிகள் தான் நம் சூரிய குடும்பத்தின் அத்தனை கோள்களின் இயக்கங்களையும் துல்லியமாக கனிக்க உதவுகிறது.

நிலவின் ஒரு திதி என்பது நிலவின் 13 திகிரி நகர்வை குறிக்கிறது. நிலவு 30 திகிரி சாய்ந்த வட்டப் பாதையில் வருகிறது. பூமி தன்னை தானே சுற்றுவது நேராக இருப்பதால் ஒவ்வொரு திதியின் காலம் வேறுபடுகிறது.

நிலவு பூமியை ஒரு சுற்று வர 27 திதிகள் ஆகிறது. பௌர்ணமி to பௌர்ணமியோ அல்லது அமாவாசை to அமாவாசையோ 30 திதி ஆகிறது.

இந்த திதி கணக்கு இந்த காலத்தில் தேவையா, நாட்கள் வருச கணக்குகள் சரியாக வராதா? என நான் யோசித்தது உண்டு!.

ஆனால் நம் தமிழ் எழுத்துக்கள் 247 மற்றும் திருக்குறளின் 133 எனும் என்னும் திதி கணக்குகளுக்குள் அடங்குவதைப் பார்த்து வியந்து போனேன்.

சிவன் உருவாக்கிய திதி காலக் கணக்கு தான் இன்றும் சிறப்பாக துல்லியமாக பொருந்தி வருகிறது. அவன் சரியான காலன் தான். இவர்களுக்கு சாவு மணி அடிக்கும் காலன்.

ஆண்டு கணக்கு என்பது நிலவின் 12 மாசங்களை குறிக்கும்.

மாசம் என்பது 30 திதிகள்.

திங்கள் என்பது 27 திதி.

12 திங்கள் சேர்ந்தது ஒரு வருடம்.

12 x 27 = 324 திதிகள்.

370.37 (365.25 நாட்கள்) திதிகள் ஒரு வருசம்.

மாதம் என்பது 29, 30, 31,32. என மாதத்தின் தேதிகள் மாறுபடும்.

360 திதி என்பது 354 நாட்கள் கொண்ட சந்திரமான ஆண்டு கணக்கு.

370.37 திதி என்பது ஒரு வருசம் (365.25 நாட்கள்) என்பது சூரியமான ஆண்டு கணக்கு

247 சந்திரமான ஆண்டுகள் என்றால்

247 x 360 திதி = 88, 888.888 திதிகள்.

88,888.888 திதிகளை 370.37037 எனும் வருசத் திதியை வகுத்தால் 240 வருசங்கள். அதாவது 247 சந்திரமான ஆண்டுகள் = 240 வருசங்கள்.

247 ஆண்டுகள் என்பது 246.91 என்ற எண்ணின் 247 என்ற முழு எண்ணாக்கினார்கள் நம் முன்னோர்கள்.

இந்த 247 ஆண்டுகள் என்பது சூரியனின் ஒரு பாத நகர்வு ஆகும். சூரியன் 108 பாதம் நகர 108 X 246.91 = 26, 666.666 சந்திரமான ஆண்டுகள். அதாவது

26, 666.660 x 360 திதி = 96,00,000 திதிகள்.

இந்த 96,00,000 திதிகளை வருசக் கணக்காக (சூரியமான ஆண்டாக) மாற்றினால்

96,00,000 / 370.37 = 25, 920 வருசங்கள்.

அதாவது சூரியன் கருமையத்தை ஒரு முறை சுற்றி வர 25,920 வருசங்கள் அல்லது 26,666.666 சந்திரமான ஆண்டுகள்.

நம் திருக்குறளில் உள்ள 1330 என்பது ஆண்டு கணக்கு தான். இதில் விடுபட்ட எண் 3.333

1330 + 3.33 = 1333.33

இது சூரியன் ஒரு வீடு கடக்க எடுக்கும் காலம் ஆகும்.

1333.33 X 360 = 4, 80,000 திதிகள். இதை வருசம் ஆக மாற்ற

4,80,000/370.37037 = 1296 வருசங்கள்.

சூரியன் ஒரு வீடு கடக்க 1296 வருசங்கள் ஆகும்.

ஒரு வீடு என்பது சக்தி மையத்தின் இரண்டு திகிரி நகர்வு. அதாவது சூரியன் 20 வீடுகளை கடந்தால் ஒரு சுற்று வந்து விடும்.

நிலவு பூமியை சுற்ற 27 நட்சத்திரங்கள்.

பூமி சூரியனை சுற்ற 12 மாதங்கள்.

சூரியன் கருமையத்தை சுற்றி வர 20 வீடுகள்.

20 X 1333.333 = 26,666.66 ஆண்டுகள் அல்லது

20 X 1296 = 25,920 வருசங்கள்.

சூரியனின் ஒரு வீடு என்பது 18 படிகளை கொண்டது.

| | |
|---|---|
| 1296 / 18 | = 72 வருசங்கள் |
| 1333.33/18 | = 74.074 சந்திரமான ஆண்டுகள் |
| 72 வருசம் | = 74.074 ஆண்டுகள். |
| 72 X 360 திகிரி | = 25, 920 வருசங்கள். |

நம் முன்னோர்கள் சூரிய நகர்வு ஒரு திகிரி நகர 72 ஆண்டுகள் ஆகும் போது ஏன் 60 சூழல் ஆண்டு கணக்கை

வைத்தார்கள்?

சூரியன் ஒரு பாதம் நகர 247 ஆண்டுகள் அல்லது 240 வருசங்கள். 240/60 = 4.

247 ஆண்டுகளில் 3.333 திகிரி சூரியன் நகரும். அல்லது 240 வருசங்களில் 3.33 திகிரி நகரும். இதை பூமியிலிருந்து பார்க்கும் போது 4 x 60 = 240 வருசங்களாகிறது. அதாவது சூரியன் 3.33 திகிரி நகர்வது பூமியிலிருந்து சூரியனுடன் நகர்ந்து கொண்டே பார்ப்பதால் 4 திகிரி நகர்ந்ததாக தெரியும். ஆனால் சூரியன் ஒரு பாதம் தான் நகர்ந்து இருக்கும் (3.33 திகிரி).

36 x 60 வருசம் = 2160 வருசத்தில் பூமியிலிருந்து சூரியனை பார்க்கும் போது 30 திகிரி ராசிகளில் நகர்ந்தது போல் தெரியும். ஆனால் உண்மையில் சூரியன் இரண்டு நட்சத்திரங்களைத்தான் கடந்து இருக்கும் . இன்னும் ஒரு பாதம் செல்ல வேண்டி இருக்கும். ஏன் என்றால் சூரியன் 33.33 திகிரி சாய்ந்த வட்டப் பாதையில் சக்தி மையத்தை சுற்றி வருகிறது. எனவே சூரியனின் பாதை பூமியிலிருந்து பார்க்கும் போது ராசியில் 36 x 60 = 2160 ஆண்டுகள் ஒரு ராசியை கடந்தது போல் தெரியும். ஆனால் இன்னும் ஒரு பாதம் நகர வேண்டி இருக்கும். எனவே ஒரு பாதத்தை முன் நகர்த்தி ராசிக்காக நாம் அசுவினியில் இருந்து இரண்டு நட்சத்திரம் ரேவதி, உத்திரட்டாதி என இரண்டு நட்சத்திரங்களை மட்டும் நகர்த்தி காலப் புருசனை 2160 வருசங்களுக்கு ஒரு முறை மாற்றி அமைக்க வேண்டும். கலியாண்டு 5126 எனில் அந்த 2160 வருசங்கள் 1900-த்திலேயே முடிந்து விட்டது. 33.33 திகிரி சாய்ந்த வட்டப்பாதையில் தான் 27 நல்சித்திரங்கள் இருக்கிறது. 24 திகிரி பூமியின் பாதையைத் தான் ராசியாக பிரித்தார் நம் திருமால். ராசி உருவானது 4320 ஆண்டுகளுக்கு முன்புதான். ஆனால் நட்சத்திரம் சிவன் காலத்திலேயே அதாவது 20,000

ஆண்டுகளுக்கு முன்பே சூரிய நகர்வின் அடிப்படையில் உருவாக்கப் பட்டு இருக்கிறது.

எனவே 2160 ஆண்டுகளுக்குப் பிறகு நாம் பஞ்சாங்கம் மாற்றி அமைத்து காலப் புருசனை மீனத்துக்கு மாற்றி அமைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

நம் கோயில்களில் 420 வருசங்களுக்கு முன்பு விசய நகர அரசு அமைந்த போது உள்ளே புகுந்தவர்களுக்கு, 420 ஆண்டுகளுக்கு முன்பு வரை பூமி உருண்டை என தெரியாதவர்களுக்கு பஞ்சாங்க கணக்குகளை மாற்றி அமைக்கத் தெரியாது. எனவே நாம் அனைவரும் சேர்ந்து தான் இந்த கணக்குகளைப் புரிந்து பஞ்சாங்க கணக்குகளை மாற்றி நம் தமிழ் மக்களை ஜாதகம் எனும் மாயையிலிருந்து விடுவித்து, உண்மையான சோதிடம் நோக்கி நகர வழிவகை செய்ய வேண்டும்.

சோதி (சூரியன்) இருக்கும் இடம் தெரிந்தவன் தான் சோதிடன்.

இந்த 370.37 திதிகள் ஒரு வருசம் ஆகும். இதுவே பூமியின் சுற்றளவுக்கான ஒரு பாதம் ஆகும்.

108 x 370.37 = 40,000 km.

இப்படி பூமி காலத்தாலும், தூரத்தாலும், வேகத்தாலும், சரியான இடத்தில் அமைந்து இருப்பதால் தான் இங்கு உயிரினங்கள் தோன்றி உள்ளது.

பூமியின் வேகம் 29.5 km/s.

இது நிலவு பூமியை சுற்ற எடுக்கும் காலம் 29.5 நாட்கள் அல்லது 30 திதி.

கலி ஆண்டு 5126 என்பது சூரியமான ஆண்டு அதாவது வருசம் அல்லது yearஐத்தான் குறிக்கும். 5126 ஆண்டுகளுக்கு முன் மகாபாரதப் போர் நடந்த பிறகு கலியுகம் 5000 ஆண்டுகள் இருக்கும் என கிருட்டிணன் மகாபாரத வெற்றிக்குப் பின் கூறி

உள்ளார். இதை எப்படியோ நம் முன்னோர்கள் நமக்கு கடத்தி கொடுத்து இருக்கிறார்கள். இந்த வருச கணக்கை வைத்துப் பார்த்தால், நமக்கு இதன் படி 1900-த்திலேயே மேச ராசி யிலிருந்து மீனராசிக்கு வந்து விட்டது போல இருக்கிறது.

2020 - ல் சித்திரை-1 இரண்டு 60 வருசங்களை கடந்து இருக்கிறது. எனவே சமநாளில் இருந்து இரண்டு நாட்களை முன் தள்ளி march-23-ல் சித்திரை-1 ஆரம்பிக்க வேண்டி இருக்கும் போல இருக்கிறது.

இது நான் முன் வைக்கும் கருத்து

நிலவு 27 திதியில் பூமியை 360 திகிரி பாதையில் ஒரு சுற்று வந்து விடும். இந்த 27 திதியை 27 நட்சத்திரங்களாக வானில் வடித்தார்கள். மறுபடியும் 3 திதி கடந்து பௌர்ணமி ஆக மாறும். 27 + 3 = 30 திதியில் ஒவ்வொரு பௌர்ணமியும் வரும். 27 திதியை ஒரு திங்கள் என்றும். 12 திங்கள் சேர்ந்தது அதாவது 12 x 27 = 324 திதியை ஒரு வருடை அல்லது வருடம் என்றும், 30 திதியை ஒரு மாசம் என்றும் 12 மாசங்கள் சேர்ந்தது ஒரு ஆண்டு அல்லது சந்திரமான ஆண்டு என நிலவின் ஓட்டத்தை வகைப் படுத்தினார்கள் நம் முன்னோர்கள்.

அதே போல் பூமி சூரியனை சுற்றுவதை 365.25 நாட்கள் அல்லது 370.37 திதி என கணக்கிட்டார்கள். பூமியின் சுற்றை அறிவதற்கு ராசியை உருவாக்கி ஒவ்வொரு ராசிக்கும் 30 திகிரி கொடுத்து 12 ராசிகளுக்கு 12 x 30 = 360 திகிரியில் பூமி வலம் வருவதை கணக்கிட்டார்கள். ஒவ்வொரு ராசியிலும், பூமி 29, 30, 31 அல்லது 32 நாட்களில் கடப்பதை மாதம் என குறிப்பிட்டார்கள். 12 மாதங்களில் 360 திகிரியை கடக்குமானால் 365.25 நாட்கள் ஆனது அல்லது 370.37 திதிகள் ஆனது. இதை வருசம் அல்லது சூரியமான ஆண்டு என கணக்கிட்டார்கள்.

இது சூரியன் சுற்று பூமியின் சுற்றுக்கு எதிர் திசையில்

இருப்பதால் நடக்கிறது என புரிந்து கொண்டார்கள். இப்படி நிலவின் ஓட்டத்தை திங்கள், வருடம் என்றும், மாசம், சந்திரமான ஆண்டு எனவும், பூமியின் ஓட்டத்தை மாதம், வருசம் எனவும் வகைப் படுத்தினார்கள்.

இதையெல்லாம் ஒவ்வொரு கோயில்களிலும் கருவரையிலிருந்து கொடி மரத்தின் வழியாக ஒவ்வொரு ஊர்களிலும் பூசாரிகள் கணக்கிட்டார்கள். அந்தந்த ஊர்களுக்கு காலண்டர் தயாரிப்பது அந்தந்த ஊர்களின் பூசாரிகளாக இருந்தார்கள்.

ஒவ்வொரு நாள் 6 கால பூசைகளிலும், நிலவின் ஓட்டத்தையும், சூரியன், மற்றும் கோள்களையும், கருவரையில் இருந்து கொடி மரத்தின் வழியாக கணித்தார்கள்.

இதை ஒவ்வொரு மகா சிவராத்திரிகளில் எல்லா பூசாரிகளும் சேர்ந்து பெரிய சிவன் கோயில்களில் இரவு முழுதும் கண் விழித்து சரி பார்த்துக் கொண்டார்கள். அவரவர் புரிதல் சரியா ? தவறா? என விவாதித்து தெளிந்து கொள்வார்கள்.

நம் கோயில்கள் 420 ஆண்டுகளுக்கு முன்பு வரை சூரியன், பூமி, நிலவு பாதைகளை கணக்கிடுவது மட்டுமல்ல, 64 கலைகளும், சொல்லித் தரும் கல்வி கற்கும் ஆசான் பள்ளிகளாக இருந்தது. 64 வகையான தொழில்களில் தேர்ந்த சித்தர்கள் கோயில்களில் ஆசான்களாக ஒவ்வொரு ஊர்களுக்கும் சென்று கற்றுத் தருவார்கள், நம் மக்கள் ஆங்காங்கே அந்தந்த ஊர்களில் கற்றுக் கொள்வார்கள்.

நான் எகிப்தில் உள்ள Giza pyramid நேரில் தரிசித்த பொழுது உடல் சிலிர்த்து நம் முன்னோர்கள் வடித்த அதிசயத்தை கண்டு அசந்து நின்றேன். அங்கு சுண்ணாம்பு கற்களை கொண்ட மலையை உடைத்து ஆங்காங்கே அடுக்கி, அந்த மலையை குடைந்து , கிழக்கில் உள்ள நம் இணை

சூரியன்களையும், ஆதி ஓரையும் கவனிக்க ஒரு Channel - ஐ King Chambar -ல் இருந்து கவனிக்கவும், வடக்குப் பகுதியில் உள்ள துருவ நட்சத்திரத்தை கவனிக்க Queen chamberi 1-ல் இருந்து ஒரு Channel - ஐயும் உருவாக்கி தொடர்ந்து 1330 + 1330 சந்திரமான ஆண்டுகளாக அவதானித்து இருக்கின்றனர். இதை வடிவமைத்ததே அடுத்த ஊழி வரும் ஆண்டை அறிவித்த கிருட்டிணன் கணக்கு சரிதானா என்பதை சரிபார்க்கத் தான்.

இப்பொழுது இருந்து 5000 ஆண்டுகளுக்கு முன்பு அதை நம் வெட்டுவான் கோயில்கள் போல வெட்டி அடுக்கி இருக்கிறார்கள்.


முதல் Pyramid உயரம் 143.33 மீட்டர்கள் . இந்த pyramid -ன் 10 மீட்டர் உயரத்தில் ஏறித்தான் Pranid-க்குள் உள்ள king's Chamber-க்குள் நுழைந்து செல்லும் வழி அமைந்து உள்ளது. இந்த 10 meter - ஐ கழித்தால் அதன் உயரம் அதிலிருந்து 133.3 meter.

இது திருக்குறளின் எண்களோடு ஒத்துப் போகிறது. மற்றும் இது 133 ஆண்டு கணக்கான விண்ணியல் அறிவையும், மற்றும் சூரியனுடைய நகர்வுகளையும், 5000 ஆண்டுகளுக்கு முன்பே நம் மக்கள் அறிந்து உள்ளார்கள், மற்றும் meter எனும் கணக்கியலை விண்ணியலில் இருந்து அறிந்து இருக்கிறார்கள் என்பது புரியும் வண்ணம் அதை வடிவமைத்து இருக்கிறார்கள். அதன் மொத்த பரப்பளவு 13 ஏக்கர். என்பது திருக்குறளின் 13 இயல்களை குறித்து 13 x 30 = 390 திதிகளையும் குறிக்கிறது.

இந்த pyramid-க்கும் வடக்கில் உள்ள Sphinx என்பது வானில் தெரியும், ஆதி ஓரையில் உள்ள 3 உலக்கை மீன்களின் வடக்கில் உள்ள அண்ட வெடிப்பின் மையமான சிவத்தைக் குறிப்பதாக வடிவமைத்து உள்ளார்கள். அதன் நீளம் 72 மீட்டர்

என்பது சூரியனின் ஒரு திகிரி நகர்வையும், அதன் உயரம் 20 meter-கள் என்பது சூரியனின் 20 வீடுகளையும் குறிக்கும் விதத்திலும், மற்றும் அது வானில் தெரியும் ஆதி ஓரையில் உள்ள மூன்று உலக்கை நட்சத்திரங்களின் இடையில் வடக்கு தெற்காக ஒவ்வொரு ஊழியிலும் நகரும் எனும் கணக்கில் அதற்கு தலை மற்றும் காளை வடிவத்தையும் கொண்டு வடித்து இருக்கிறார்கள். மற்றும் நடுவில் உள்ள Pyramid சிவனைக் குறித்து 148.1 meter உயரத்திற்கு வடிவமைத்து உள்ளார்கள்.

148.1 X 324 = 48,000 திதி கணக்கையும் அது 133.33 x 360 = 48,000 திதி எனும் ஆண்டு கணக்கும் விளக்கும் விதமாக வடித்து இருக்கிறார்கள். 148 எனும் எண் 27 திதிகளை அடிப்படையாக கொண்டு சிவன் காலம் கணித்ததை நினைவு கூறும் விதமாக இரண்டாம் Pyramid கட்டி இருக்கிறார்கள்.




மூன்றாம் Pyramid-ம் இது போல கிருட்டினன் நினைவாக 10 meter உயரத்தில் இருந்து 55.5 meter உயரத்திற்கு வடித்து இருப்பது அவர் பூமியின் 1 திகிரி அளவை நாம் நிற்கும் இடத்திலிருந்து நம்மை சுற்றி உள்ள தொடுவானம் வரை உள்ள தூரத்தை அளந்தார் என்பதை இதன் உயரம் 55.5 meter என தக்க வைத்து உள்ளார்கள்.

555 என்பது கிருட்டிணனின் எண். இன்பத்து பாலுக்குக்கு சொந்தக்காரன் கிருட்டிணன். பொருட்பாலுக்கு சொந்தக்காரன் சிவன். அறத்துப் பாலுக்கு சொந்தக்காரர் முருகன். முருகன் சூரியனுடைய சுற்றையும் அளவெடுத்தவர் என்பதால் காலத்தால் மூத்தவரான அப்பனுக்கே பாடம் சொல்லிக் கொடுத்தவர் எனும் பெயர் பெற்றவர்.

இங்கு இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும் இந்த $98.6^{0}$ F என்பது மனித உடலின் சாதாரன வெப்ப நிலை. இது $37^{o}$ C.

C = (F-37) x 5 / 9 = ( 98.6 - 37 ) x 5 / 9 = 37.

98.6-37 = 66.66 x 5 = 333 எல்லாம் விண்ணியல் கணக்குகள். அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் உள்ளது.

திருக்குறளில் மொத்தம் 3 பால் 13 இயல்கள்.

அறத்துப் பாலில் நான்கு இயல்கள்

1. பாயிரம் (4)
2. இல்லறவியல் (20)
3. துறவறவியல் (13)
4. ஊழியல் (1)

.பொருட்பாலில் 7 இயல்கள்.

5. அரசியல் (25)
6. அமைச்சியல் (10)
7. அரணியல் (2)
8. கூழியல் (1)
9. படையியல் (2)
10. நட்பியல் (1)
11. குடிமையியல் (13)

இன்பத்துப் பாலில் 2 இயல்கள்.

12. கற்பியல் (18)
13. களவியல் (7)

சூரியனின் ஒரு முழு சுற்று என்பது சந்திரமான ஆண்டுக் கணக்கில் 26,666.666 ஆண்டுகள், அல்லது சூரியமான ஆண்டுக் கணக்கில் 25,920 ஆண்டுகள்.

திருக்குறளில் 133 என்பது சந்திரமான ஆண்டுகளைத் தான் குறிப்பிட்டுள்ளார். ஏன் எனில் திருவள்ளுவர் பறையர் சமூகத்தை சேர்ந்தவர் என்பதால் சந்திரமான ஆண்டு கணக்குகளைத்தான் பயன்படுத்துவார். திருக்குறளில் சந்திரன் ஓட்டத்தையும், சக்தி மையத்தின் ஓட்டத்தின் ஆண்டு கணக்கைத் தான் கூறியுள்ளார். சக்திகளை நாம் தெய்வங்கள் என்று தான் கொண்டாடுகிறோம். 7 கன்னிமார் என்பது தெய்வங்கள் தான். எனவே தான் அவரை தெய்வப் புலவர் என்று அழைக்கிறோம்.



நிலா பயிற்சி மையம்
ஆழியார்
பொள்ளாச்சி